# மான்மின் செய்திகள்

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St., Villivakkam, Chennai - 49, India. Tel : 044-43554542, Fax : 044-26172471, E-mail : indiajoseph@gmail.com

## "பரலோக பொக்கிஷங்கள் புத்தகங்களில்"

### அறிவர்.லீ ஜேராக் அவர்களது புத்தகங்கள் 29 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன

மிகுந்த ஆவலோடு தலைமைபோதகர்.அறிவர்.லீ ஜேராக் அவர்களது புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இவ்வேளையில், அவரது புத்தகங்களில் ஆர்வம் குவிந்துகொண்டே வருகிறது. தற்போது, அவரது புத்தகங்கள் ஆங்கிலம், சீனம் மற்றும் ஸ்பானியம் உட்பட 29 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மேலும், 164 பாகங்களாக பல புத்தக - மொழி இணைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன. மொழிபெயர்க்கப்படும் மொழிகளின் எண்ணிக்கைகள் 73 ஆக விரிவடைந்துள்ளன.

சமீபமாக, ஊரீம் புத்தகங்கள் அறிவர்.லீ அவர்களது புத்தகங்களில் சிலவற்றை 7 மொழிகளில் வெளியிட்டு மக்களின் கவனத்தை ஈர்த்தது: *1கொரிந்தியர் பிரசங்கங்கள்* சாதாரணமான *சீனத்தில்*, ஜப்பானியத்தில் *தேவனுடைய வல்லமை*, ஸ்பானியத்தில் *என் வாழ்வும், என் விசுவாசமும் II* மற்றும் *பரலோகம் II*, போர்ச்சுகீசியத்தில் *சிலுவையின் செய்தி* மற்றும் *என் வாழ்வும் என் விசுவாசமும் II*, இந்தோனேசியத்தில் *பரலோகம் II*, இஸ்ரவேலே எழும்பு, *மெய்யான ஆசீர்வாதங்களை நாடுகிற மனிதன்* மேலும் டச்சு மற்றும் ரோமானியத்தில் *சிலுவையின் செய்தி* போன்றவையாகும். அறிவர்.லீ அவர்களது புத்தகங்களை வாசிக்கையில் எண்ணற்ற வாசகர்கள் ஆண்டவருடைய அன்பை உணர்ந்துள்ளனர். இருதயங்களை மாற்றும் பரிசுத்த ஆவியின் கிரியைகளையும் அனுபவித்திருக்கின்றனர்.

பிற தேசங்களிலிருந்து உலகளாவிய பணித்தள ஊழிய பயிற்சியில் பங்கு பெற வரும் MMTC பயிற்சியாளர்களும் கூட அவரது புத்தகங்களுக்கு வாஞ்சையுள்ள இருதயங்களை வெளிப்படுத்தினர்.

*சீனாவிலுள்ள அங்கத்தினர்* ஒருவர், "அறிவர்.லீ அவர்களது புத்தகங்களை நான் வாசிக்கும்போதெல்லாம் வித்தியாச வகையான கிருபையால் நிரப்பப்படுகிறேன். தேவனுடைய வார்த்தையாலே எங்களை தரிப்பித்துக் கொள்வதிலும், சிறுகுழு கூட்டங்களில் செய்திகளை பிரசங்கிக்கவும் புதிய விசுவாசிகளை வழிநடத்துவதிலும் அவரது புத்தகங்கள் பேருதவியாக உள்ளன. அவர்கள் சபை விசுவாசிகளுடன் புத்தகங்களை பகிர்ந்து கொள்கின்றனர். அவைகளை நீண்ட நாட்கள் உபயோகித்ததால் அவைகள் கிழியுமளவிற்கு மிகவும் பிரபல்யமாய் உள்ளன. நான் புத்தகங்களை பலமுறை வாசித்தேன். சிலுவையின் செய்தியை நான் ஏழு முறை வாசித்தேன்" என்று கூறினார்.




U.S.லிலிருந்து அலெக்ஸ் அபான்கின், "ஆவிக்குரிய ரீதியில் மன வேதனையில் இருப்பவனாக இருந்தேன். ஆனால் நான் அறிவர்.லீ அவர்களது புத்தகங்களை வாசிக்க துவங்கியபோது எனது சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் நான் திரும்ப பெற்றுக்கொண்டேன்" என்று குறிப்பிட்டார்.

வியட்நாமிலிருந்து போதகர். டேவிட்நாம், "அறிவர்.லீ அவர்களது புத்தகங்களை வாசிப்பதை நான் ஒரு ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்று கருதுகிறேன், அவைகள் வேதாகமத்தில் புதைந்துள்ள ஆவிக்குரிய அர்த்தங்களையும் தேவனுடைய வல்லமையையும் நான் தெளிவாய் புரிந்து கொள்ள உதவுகின்றன" என்று கூறினார்.

அறிவர்.லீ அவர்களது புத்தகங்கள் இணையதளத்தில் மின் புத்தக வடிவமைப்பில் ஆயத்தமாயுள்ளன. www.amazon.com என்ற இணையதளத்தின் உள்சென்று, புத்தகங் களை வாங்கி, உங்களது கணினியில் இறக்குமதி செய்யலாம் அல்லது உங்களது ஸ்மார்ட் போனில் இறக்குமதி செய்யலாம் அல்லது amazon.com-மின் மின் புத்தக வாசகரை கிளப்பி விடலாம். உங்களுக்கு தகவல் குறித்த சந்தேகங்கள் ஏதும் இருப்பின், ஊரீம் புத்தக இணையதளமான www.urimbooks.com-ல் கேட்கலாம். அல்லது urimbook@hotmail.com-மிற்கு மின் அஞ்சல் அனுப்பலாம்.



மான்மின் மத்திய திருச்சபையின் பதிப்பக துறை மக்கள் இணைய தளத்தின் மூலமாக எங்கிருந்தும் எந்த நேரத்திலும் அறிவர்.லீ அவர்களது புத்தகங்களை வாசிக்கும்படியாக "மின் நூலகத்தை" ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறது.

### அறிவர்.லீ ஜேராக் அவர்களின் புத்தகங்களிலிருந்து தேவனுடைய அன்பை இறக்குமதி செய்யுங்கள்

இந்த அற்புதமான வல்லமையான புத்தகம், பரலோகம் I-ஐ நான் திறந்த நிமிடத்திலிருந்து என் மனதை கொள்ளை கொண்டு விட்டது. ஒன்றரை நாளில் அப்புத்தகத்தை வாசிக்க வேண்டும் என்று உத்தேசிக்கவில்லை, ஆனால் அதுதான் நடந்தது. அறிவர்.லீ ஜேராக் அவர்கள் தேவனோடு மெய்யாகவே தனிப்பட்ட வலுவான உறவு வைத்திருக்கும் இணையற்ற தேவ மனிதர் ஆவார். தம்முடைய பிள்ளைகள் அனைவருக்காக காத்திருக்கும் மகிமையான இராஜ்ஜியத்தைக் குறித்த, மிகவும் எதிர்பார்ப்புள்ள இரகசியங்களை அதிசயமாக பகிர்ந்தளிக்க அவரை தேவன் அனுமதித்ததால், நான் மிகவும் நன்றியுள்ளவளாயிருக்கிறேன். அவர் ஏதேன் தோட்டம், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரலோகங்கள், தங்க வீதிகள், மேக வாகனங்கள், மூன்றாம் பரலோகத்தில் தேவனுடைய பிள்ளைகளுக்கு சேவை செய்யும் தூதர்களை விளக்கி ஒரு அருமையான வேலையை செய்துள்ளார்.

கீழ்நிலை பரலோகத்தில் உள்ள சமுதாய வசதிகளின் மேற்பார்வையும்கூட அருமையாக இருந்தது. நானும் எனது குடும்பத்தினரும் எப்போதும் எதை சாப்பிடுவோம் என்று கவலைப்பட்டு கொண்டிருந்தோம், சாப்பிட இருக்குமென்றால் எதை உடுத்துவோம் என்ற கவலை இருந்தது. உண்மையில் நாம் அனைவரும் நித்தியத்திற்காக என்ன செய்யப்போகிறோம்! இந்த கேள்விகளுக்கெல்லாம் அதற்கும் மேலும் இப்புத்தகத்தில் பதிலளிக்கப்பட்டிருக்கின்றன. பரலோகம் எப்படி இருக்கும் என பார்க்க விரும்பினால், இப்புத்தகத்தை வாசிக்க மறுக்காதீர்! நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!

குட்ரீட்ஸில், ஜெனெட்ஸின் விமர்சனம் (www.goodreads.com)

அறிவர்.லீ ஜேராக் அவர்களால் எழுதப்பட்ட சிலுவையின் செய்தியை வாசிக்கையில் பாவம் எப்படி நம்மிடத்தில் வரும் என்று அறிந்துகொள்ளலானேன். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மானுட வேளாண்மையின் அநாதி திட்டத்தையும், லூசிபரின் பங்கையும் புரிந்துகொண்டேன். பரலோகம் மற்றும் நரகத்தை குறித்து தெளிவாக அறியாமல் முன்னதாக நான் பிரசங்கித்திருக்கிறேன். ஆனால் அவைகளை குறித்து அறிவர்.லீ அவர்களது புத்தகங்கள் மூலமாக தெளிவாக புரிந்துகொண்டேன். (Jeannette walls).

(போதகர்.ஆரோன் குங், ஆஸ்திரேலியாவிலுள்ள சின் பாப்திசு திருச்சபை).

அறிவர்.லீ அவர்கள் தமது நரகம் என்ற புத்தகத்தில் மிகவும் விவரிக்கக்கூடிய மொழியைப் பயன்படுத்தி அங்கு செல்பவர்கள் எவ்வளவு கொடிதாய் கஷ்டப்படுவார்கள் என்று நரகத்தின் நிலைகளை குறித்து வர்ணித்து தெளிவாய் விளக்குகிறார். அது நிச்சயமாக ஒரு நபர் தன்னுடைய வாழ்வில் ஆவிக்குரிய நிலையை சீர்தூக்கி பார்க்க செய்யும்.

amazon.com-மிலிருந்து விமர்சனம்

### 'விசுவாசத்தின் அளவு' கருத்தரங்கு இந்தியாவில் மாராநாதா இறையியல் கல்லூரியில் நடைபெற்றது.

பிப்ரவரி 8ம் தேதி அன்று, "விசுவாச அளவு" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று வழிநடத்தும் போதகர். ஜோசப்ஹான் அவர்களுக்கு கீழ் நடத்தப்பட்டது. சென்னை, வேலப்பன்சாவடியில் உள்ள மாராநாதா இறையியல் கல்லூரியில் அது நடத்தப்பட்டது (தலைவர்: உயர்திரு.அறிவர்.அலெக்சாண்டர் ஜோசப்). போதகர்.ஜோசப் ஹான் தற்போது சென்னை மான்மின் திருச்சபைக்கு ஊழியம் செய்கிறார். மான்மின் ஊழியத்தை காட்டும் "தேவனுடைய வல்லமை" என்ற ஒளிபரப்பிற்கு பின்னர் போதகர்.ஹான் அவர்கள் அறிவர்.லீ ஜேராக் அவர்களது முக்கிய பிரசங்கமான "விசுவாசத்தின் அளவு" என்ற செய்தியினை கொடுத்தார். ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் விசுவாசத்திற்கேற்ப கொடுக்கப்படும் பரலோக வாழ்விடங்களையும், விசுவாசத்தின் ஐந்து நிலைகளையும் குறித்து அவர் விளக்கினார், கல்லூரியில் உள்ள ஒவ்வொரு மாணவர் மீதும், நபருக்கு நபர் விசுவாசம் எவ்வளவு வித்தியாசமாயுள்ளது என்று போதித்தபோது அவர்கள் அதிக கிருபையை பெற்றுகொண்டனர். போதகர்.ஹான் அவர்களுக்காக வல்லமையின் கைக்குட்டையுடன் ஜெபித்தார் (அப் 19:11-12).



# மாபெரும் ஆச்சரிய வல்லமை

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்." (யோவான் 14:12).

இந்த கடைசி நாட்களில், அறிவு பெருகி பாவமும் பொல்லாப்பும் அதி தீவிரமாகி கொண்டிருக்கும்போது, எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிக்கவும், தேவனுடைய இராஜ்ஜியத்தை விரிவுபடுத்தவும், ஜனங்களுக்கு தேவனுடைய வல்லமை தேவைப்படுகிறது. மான்மின் திருச்சபையில் நம்முடைய கற்பனைக்கும் அப்பாற்பட்ட அளவில் வல்லமையை தேவன் வெளிப்படுத்தி இருக்கிறார். இருதயங்களை மாற்றக்கூடிய வல்லமையையும்கூட அவர் நமக்கு தந்தருளியிருக்கிறார்.

எப்பொழுது நாம் கொரிய கிறிஸ்தவ திருச்சபைகளுக்கும் உலகத்திற்கும் சுவிசேஷ பணியை நிறைவேற்றுகிறோமோ அப்பொழுது வேதாகமத்தின் நிஜரூபமான உண்மைகளுக்கு சாட்சிகொடுத்து, அநேக மக்களை, கூடாதது ஒன்றுமில்லாத சிறப்பான உயர்ந்த வல்லமையின் மூலமாக அவர்களுடைய இருதயத்தை மாற்றியும், அவர்களில் விசுவாசத்தை விதைத்தும் இரட்சிப்பின் பாதைக்கு வழிநடத்துவோம்.

### 1.இரட்சகராக தமது கடமையை நிறைவேற்றும்படி உயிர்த்தெழுந்த, இயேசுவின் வல்லமை

மத்தேயு 12:38ல், சில சதுசேயர்களும் பரிசேயர்களும் இயேசுவிடம், "போதகரே, உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம்" என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள். ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்." ஏன் இயேசு யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் கொடுக்கப்படுவதில்லை என்றார்?

இது ஏனென்றால் 'அடையாளம்' நிகழ்த்துவதே இயேசுவின் மெய்யான இயற்கையாய் அமைந்த கடமையாகும். இயேசு பூமிக்கு வருகிறதின் நோக்கம், பாவிகளுக்காக மரச்சிலுவையிலே அவர் தொங்கி இரத்தம் சிந்துதலின் மூலமாக, பாவிகளை அவர்களது பாவங்கள் அனைத்திலிருந்தும் மீட்பதே. மேலும், அவருடைய உயிர்த்தெழுதலின் மூலமாக மரணத்தின் அதிகாரத்தை தகர்த்து இரட்சகராவதற்குமே. இந்த 'அடையாளத்தை' தான் இயேசு இறுதியாக நமக்கு காண்பித்தார்.

இயேசு பரலோகத்தின் நற்செய்தியை பரப்ப மிகுந்த முயற்சி செய்தார் என்பது உண்மைதான். பரிசுத்த ஆவியின் வல்லமையால் பெரும் எண்ணிக்கையான வியாதியஸ்தர்களை அவர் சுகமாக்கினார். குருடு, செவிடு, ஊமை போன்ற பலவீனமுள்ளவர்களும், சப்பாணிகளும் அவரால் பூரணமாக்கப்பட்டனர். பிசாசு பிடித்தவர்களிடமிருந்து பிசாசுகளையும்கூட அவர் துரத்தினார். தண்ணீரின்மேல் நடந்து காற்றையும் கடல் அலையையும் அமைதலாகும்படி செய்தார். அவர் எண்ணற்ற ஆச்சரிய வல்லமையான கிரியைகளை செய்தார்.

ஆனால் அப்படிப்பட்ட வல்லமையான கிரியைகள் அவரது முக்கியமான கடமையை ஆதரிக்கும் தற்செயலானவைகளான ஒன்றாகவே இருந்தன. அக்கிரியைகள் இயேசு தேவனுடைய குமாரன் என்று ஜனங்களை விசுவாசிக்க அனுமதிக்ககூடிய நிரூபண ஆதாரங்களாக செயல்பட்டன. ஆனால் மிக முக்கியமான காரியம் என்னவென்றால், தேவகுமாரனாகிய இயேசு, பாவிகளுக்காக மரித்து, உயிர்த்தெழுந்து இரட்சகரானார் என்பதே. அவருடைய காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்களுக்கு மட்டுமல்லாமல், சிருஷ்டிப்பின் துவக்கம் முதல் உள்ள எல்லா ஜனங்களுக்காகவும் அவர் மரித்து உயிர்த்தெழுந்து இரட்சகரானார். இது தான் இயேசுவால் நடத்தப்பட்ட மிக முக்கியமான மிகப் பெரும் அடையாளம் ஆகும்.



தலைமை போதகர் அறிவர்.லீ ஜேராக் அவர்களது பேருரையாற்றல்.

### 2.இறுதி காலத்தின் அநாதி திட்டத்தை அடையப் பெறும்படிக்கு மனிதர்களுடைய இருதயங்களையும்கூட மாற்றும் வல்லமை

மத்தேயு 24:3ல், "இயேசுவின் சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? என்று கேட்டார்கள். இயேசு பின்வரும் 5 முதல் 8 வசனங்களில் பதிவு செய்துள்ளபடி பதிலளித்தார். "ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்." கூடுதலாக 11 மற்றும் 12-ம் வசனங்களில், "அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்" என்றார். 14-ம் வசனம், "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" என்று நமக்கு சொல்கிறது.

ஆண்டவர் வரும்போது இஸ்ரவேல் எப்படி மாறும் என்பதை மத்தேயு 24:32-33ல் இஸ்ரவேலை அத்திமரத்துக்கு ஒப்பிட்டு இயேசு பேசினார். அது, "அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" என்று கூறுகிறது.

'அத்திமரத்தில் இளங்கிளை தோன்றி துளிர்விடும்போது' என்பது இஸ்ரவேல் நாட்டின் சுதந்திரத்தை குறிக்கிறது. அது இஸ்ரவேல் தேசம் மறைந்து பிற்காலத்தில் மறுபடியும் நிறுவப்படும் என்று முன்னறிவித்தது. ஆகவே, 'இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்' என்பது இஸ்ரவேல் சுதந்திர தேசமாகும்போது ஆண்டவருடைய இரண்டாம் வருகை மிகவும் நெருங்குகிறது என்பதாகும்.

### 3.உலக பணித்தளத்திற்காகவும் கொரிய திருச்சபைகளுக்காகவும் தேவனுடைய அநாதி திட்டத்தை அடைவதற்கான வல்லமை.

பிதாவாகிய தேவன், மாபெரும் ஆச்சர்ய வல்லமையானது யானது கொரிய திருச்சபை மற்றும் உலகம் இரண்டிலும் உள்ள பல ஜனங்கள்மீது கிரியைசெய்ய வேண்டுமென விரும்புகிறார். ஆனால் கொரிய திருச்சபைகளில் உள்ள களங்கம், அது இருப்பதைக் காட்டிலும் அதிக விஸ்தாரமாய் பரவியுள்ளது. பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பேசி, எதிர்த்து, அவரை கணானம் பண்ணிய சிலர் இருக்கிறார்கள். பிதாவாகிய தேவன் தமது நீதியை கண்டிப்பான முறையில் அவர்கள் மீது பிரயோகிப்பாரென்றால் அநேக ஜனங்கள் ஒருக்காலும் மன்னிக்கப்படாதோராய் இருப்பார்கள். ஆனால் பிதாவாகிய தேவன் "அவர்கள் கூடாதவர்கள்" என்று சொல்லிவிடவில்லை, அவர் அவர்களுக்காக மாற்றுவழிகளை கொண்டுவந்தார்.

நீதியை தாண்டி செல்கிற அன்பின் மண்டலத்தில் அவர்களை அணைத்து கொள்வதற்கு தேவன் என்னை வழியை ஆயத்தம் செய்யச்செய்து, அவர்களது இரட்சிப்பிற்கான வழி அவர்களது மனந்திரும்புதலின் மூலம்தான் என்று தெளிவாக அறிமுகப்படுத்தியுள்ளார். பிதாவாகிய தேவன் பயங்கரமான பொல்லாத மனிதர்களுக்கும்கூட ஜீவனுக்கான வழியை திறக்க விரும்புகிறார், தம்முடைய இருதயத்தையும் காட்ட விரும்புகிறார்.

ஆக 'கொரிய கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் நேராக அநாதி திட்டத்தை பிதாவாகிய தேவனுடைய அன்பில் அடையப்பெறுவதற்கு 'இருதயங்களை மாற்றும் வல்லமை' மிகவும் அத்தியாவசிய தேவையாக உள்ளது. எதிர்காலத்தில் திருச்சபையின் ஒழுங்குமுறை கிறிஸ்தவ திருச்சபைகளில் உள்ள மக்கள் பலரை அணைத்துக்கொண்டும் பூலோக மாகாணத்தை அடைந்தும் மிக பெரியதாக வளரும். மனித முறைகளில் அவர்களோடு செயலாற்றுவது என்பது எளிமையானது அல்ல. பொருப்பாய் உள்ள வேலையாட்கள் சிறப்பான ஞானத்தை பயன்படுத்தி சிறப்பான நிர்வாக முறைமைகளை ஸ்தாபிப்பதற்கு தங்களது சிறந்ததை முயற்சிக்க வேண்டும்.

அவர்கள் ஒன்றாக ஐக்கியப்பட்டிருக்கும் வரையில் இயல்பாகவே எல்லா காரியங்களும் சரியாக போய் கொண்டிருக்கும். அயல்நாடுகளில் அல்லது பழமையான பகுதிகளில் உள்ள போதகரை பொருத்தவரையில், அவர்கள் மான்மின் மத்திய திருச்சபையினருடன் ஒரே மனமாய் இருக்கும்போது கவலைப்படுவதற்கு ஏதும் இராது. மான்மினாகிய நாங்களும்கூட பூலோக மாகாணத்தை அடையப்பெறுவதற்கு 'மனிதர்களுடைய இருதயங்களை கொள்ளை கொள்ளுதல்' என்ற இச்சாதுரியத்தை பயன்படுத்திக்கொள்வோம். இது உலகத்திலுள்ள மக்களை தேவனை உண்மையாய் அறியவும் அவருடைய அன்பை அங்கிகரித்துணரவும் செய்யும். இதை அடையப்பெறுவதற்கு தேவையான மிக முக்கிய ஆயுதம் 'இருதயங்களை மாற்றக்கூடிய வல்லமையே' ஆகும். இது மரணத்திற்கு நியமிக்கப்பட்ட ஜனங்கள் இரட்சிப்படைய ஒரு வாய்ப்பை கொடுக்கும். இது அவர்களை பரலோகத்தில் சிறப்பான வாசஸ்தலங்களின்மேல் நம்பிக்கையுடையவர்களாக இருக்கும்படி செய்யும்.

இப்பொழுது இந்த கடைசி காலக்கட்டத்தில் அந்திக் கிறிஸ்துவின் வல்லமைகள் மிகவும் செல்வாக்குடையதாகி கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு தேவனால் அளிக்கப்பட்ட இருளின்மேல் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மாம்சத்திற்குரிய மனிதர்களை ஏவுகிறதால் தங்கள் செல்வாக்குகளை சம்பாதித்துள்ளன. நாம் அந்திக்கிறிஸ்துவின் வல்லமைகளை எதிர்த்து போராடி தேவனுடைய அநாதி தீர்மானத்தை இக்கடைசிக் காலத்தில் அடையப்பெற வேண்டும். இது ஆவியில் ஒருங்கிணைந்துள்ள போதகர்கள், திருச்சபை வேலையாட்களுடன் ஒன்று கூடி ஆவிக்குரிய வெளிச்சத்தை பிரகாசிக்க வேண்டிய நேரம்.

இவ்வூழியத்தில் ஒரே மனதுடன் கூடிய உங்களது பங்களிப்பில் பிதாவாகிய தேவன் பிரியப்படவும், அதனால் பரிசுத்த ஆவியானவருடைய மாபெரும் ஆச்சர்ய வல்லமை உலகம் முழுவதிலும் வெளிப்படவும் பரலோகத்தில் மகிழ்ச்சியின் எதிரொலி கேட்கவும் வேண்டும் எனறு ஆண்டவருடைய நாமத்தினால் ஜெபிக்கிறேன்.

## விசுவாச அறிக்கை

மான்மின் சர்வதேச பாடசாலை
இந்திய வளாகம்

Manmin International Seminary - India campus belongs to the United Holiness Church of Korea of which the chairman of the board of directors is Rev.Dr. Jaerock Lee. It is based on the fivefold Holiness gospel: Regeneration, Sanctification, Divine Healing, Resurrection, and Return of Christ.

DIPLOMA IN CHRISTIAN MINISTRY

One year correspondence programme

15D/41, Ponnankinaru Street, Villivakkam, Chennai - 600 049.
Tel:044-43554542, Email : indiamis@gmail.com




# விசுவாசத்துடன் யோர்தான் நதியை இஸ்ரவேலர்கள் கடந்தனர்

"சகல ஜனங்களும் யோர்தானைக் கடந்து தீருமளவும், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே தண்ணீரில்லாத தரையில் காலூன்றி நிற்கும்போது, இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரை-வழியாய் கடந்துபோனார்கள்." (யோசுவா 3:17)

பின்பு யோசுவா: ரூபனியரையும் காத்தியரையும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரையும் நோக்கி: கர்த்தருடைய தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தர் இளைப்பாறப்பண்ணி, இந்த தேசத்தை உங்களுக்குக் கொடுத்தாரே. உங்கள் பெண்சாதிகளும் பிள்ளைகளும் மிருகஜீவன்களும், மோசே உங்களுக்கு யோர்தானுக்கு இப்புறத்திலே கொடுத்த தேசத்தில் இருக்கட்டும்; உங்களிலுள்ள யுத்தவீரர் யாவரும் உங்கள் சகோதரருக்கு முன்பாக அணியணியாய்க் கடந்துபோய், கர்த்தர் உங்களைப்போல உங்கள் சகோதரரையும் இளைப்பாறப்பண்ணி, அவர்களும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களுக்குக் கொடுக்கும் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுமட்டும், அவர்களுக்கு உதவிசெய்யக்கடவீர்கள்; பின்பு, நீங்கள் கர்த்தருடைய தாசனாகிய மோசே உங்களுக்கு யோர்தானுக்கு இப்புறத்தில் சூரியன் உதிக்கும் திசைக்கு நேராகக் கொடுத்த உங்கள் சுதந்தரமான தேசத்துக்குத் திரும்பி, அதைச் சுதந்தரித்துக்கொண்டிருப்பீர்களாக என்றான். (யோசுவா 1:12-15)

### ◆ யோசுவா, புதிய தலைவனும், யாத்திராகமத்தின் இரண்டாம் தலைமுறையும்

எண்ணாகமம் 27ம் அதிகாரத்தில் எழுதியுள்ளபடி தேவன் யோசுவாவை மோசேக்கு அடுத்த தலைவனாக தெரிந்தெடுத்தார். யோசுவா கானானை வேவு பார்க்க சென்ற பன்னிரெண்டு வேவுகாரரில் ஒருவனாக இருந்து விசுவாச அறிக்கையினாலே தேவனை பிரியப்படுத்தினவனாய் இருந்தான். அவன் மோசேயின் ஊழியக்காரனாய் மோசேயின் நிழலைப்போல அவனைப் பின்பற்றினான். பத்து கட்டளைகளை பெறும்படியாக மலையின் மேல் 40 நாட்கள் உபவாசம் செய்த போதும்கூட அவன் மோசேயை விட்டுவிலகாமல் அவன் அருகே தங்கியிருந்தான். வாஞ்சையுள்ள இருதயத்தோடு தேவனுடைய ஆலயமாயிருந்த ஆசரிப்பு கூடாரத்தையும் விட்டு விலகாதவனாய் இருந்தான்.

யோசுவா மாறாத இருதயத்துடன் தேவனை நேசித்து மோசேயை நம்பினபடியினால் உபாகமம் 31ம் அதிகாரத்தில் வாசிக்கிறபடி அவனை தேவன் புதிய தலைவனாக தெரிந்துகொண்டார். தேவன் மோசேயோடேகூட அவனை ஆசரிப்புக் கூடாரத்திற்குள் அழைத்தார். இஸ்ரவேல் புத்திரர்கள் தமக்கு கீழ்ப்படியாதே போவார்கள் என்று அவர் அவர்களிடம் கூறினார். கீழ்ப்படியாமையினாலே அவர்கள் கஷ்டங்களுக்கும் வேதனைகளுக்கும் உட்படுவார்கள். தாம் கூறினவைகளுக்கு சாட்சியாக ஒரு பாடலை எழுதி அவர்கள் உதடுகளில் வழங்கப்பண்ணும்படி தேவன் அவர்களிடம் சொன்னார். பின்பு, மோசே அவர்களை தேவனுடைய நியமங்களுக்கு கீழ்ப்படியுமாறு ஊக்கப்படுத்தி தன்னுடைய மரணத்திற்கு முன்னதாக பன்னிரெண்டு கோத்திரங்களையும் ஆசீர்வதித்தான்.

மோசே நேபோ மலையில் மரித்த பிற்பாடு, யோசுவா 1:1-9ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, தேவன் யோசுவாவிடம் யோர்தானை கடந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையும்படி கூறினார். அவன் பலங்கொண்டு திடமனதாயிருக்கவும், மோசே அவனுக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்ய கவனமாயிருக்கவும் அதை விட்டு இடது அல்லது வலது புறம் சாயாதிருக்கும்படியாகவும் அவனை ஊக்குவித்தார்.

யாத்திராகமத்தின் முதல் தலைமுறையினர் எகிப்தில் பிறந்து வளர்ந்தபடியால் தேவன்மேல் அவர்களுக்கு பலவீனமான விசுவாசம்தான் இருந்தது. மேலும் எல்லா பகுதிகளிலும் எகிப்தியர்களுடைய ஒடுக்குதலினாலும், கொடுமையான நடத்துதலினாலும் பலவகையான பொல்லாத ரூபங்கள் அவர்கள் இருதயங்களில் நாட்டப்பட்டிருந்தன. இதற்கு மாறாக யாத்திராகமத்தின் இரண்டாம் தலைமுறையினர் தங்களது சிறுபிராயத்திலிருந்தே எண்ணற்ற தேவனுடைய வல்லமையான கிரியைகளை கண்டனர். தேவனுடைய வார்த்தையாலே வளர்க்கப்பட்டனர். மேலும், அவர்கள் தங்களது பெற்றோர்கள் ஏன் கானானுக்குள் வரமுடியவில்லை என்பதை புரிந்துகொண்டு அதை தங்கள் மனதில் வைத்துக்கொண்டனர். ஆகவே, கானானுக்குள் நுழைய ஆயத்தமாயிருந்த யோசுவாவுக்கு கீழ்ப்படிய சபதம் செய்துகொண்டனர். (யோசுவா 1:12-18).

### ◆ எரிகோ பட்டணத்தை வேவு பார்த்த இரண்டு வேவுகாரர்களின் விசுவாச வார்த்தைகள்

கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு இஸ்ரவேலர்கள் முதலாவது எரிகோ பட்டணத்தை பிடிக்க வேண்டியிருந்தது. எரிகோவின் உட்புற சுவரும், வெளிப்புற சுவரும் பலமுள்ளதாயிருந்தது. அது தகர்க்க முடியாத பட்டணமாய் இருந்தது. மேலும்கூட, எரிகோவின் மக்கள் இஸ்ரவேலரின் தாக்குதலுக்கு எதிராக காவலர்களை வைத்து கெடுபிடியான பாதுகாப்பை வைத்தனர்.

யோர்தானை கடப்பதற்கு முன்னதாக, யோசுவா தேசத்தை குறிப்பாக, எரிகோவை கண்காணிக்க இரண்டு வேவுகாரர்களை சீத்திமிலிருந்து அனுப்பினான். எரிகோவின் ராஜா பட்டணத்திற்குள் வேவுகாரர்கள் வந்ததை கேள்விப்பட்டு, அவர்களை அவன் தேடினான். ஆனால் ஒரு கானானிய பெண்மணியான ராகாப் மூலமாக வேவுகாரர்களுக்கு தமது உதவி கரத்தை தேவன் நீட்டினார். அவள் ஒரு வேசியாய் இருந்தாள், ஆனாலும் அவள் நற்குணமுடையவளாய் இருந்தாள். இஸ்ரவேலர்களை வழிநடத்திய தேவனுடைய கிரியைகளையும் விசுவாசித்தாள்.

அந்த இரு மனிதர்களும் ராகாபின் உதவியால் எரிகோவிலிருந்து தப்பி, தங்களுக்கு நடந்த எல்லாவற்றையும் யோசுவாவிற்கு விவரித்தனர். அவர்கள் பயத்தினாலோ எதிர்மறையாகவோ அறிக்கை செய்யாதபடி விசுவாசத்துடனும், தைரியத்துடனும் அறிக்கை செய்தார்கள். இப்படியாக அவர்கள் தேவனுக்கு மகிமை செலுத்தினார்கள் (யோசுவா 2ம் அதிகாரம்).

✣ அவர்கள் யோசுவாவை நோக்கி, "கர்த்தர் தேசத்தையெல்லாம் நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார், தேசத்தின் குடிகளெல்லாம் நமக்கு முன்பாகச் சோர்ந்து போனார்கள் என்று அவனோடே சொன்னார்கள்" (யோசுவா 2:24). காதேஸ் பர்னேயாவிலிருந்து வந்த பத்து வேவுகாரர்களின் அறிக்கைக்கு, இவர்களது அறிக்கை எதிராய் இருந்தது. அதுபோல, தேவனை உண்மையாய் விசுவாசிப்பவர்கள் "இது கூடாது" அல்லது "இது கடினம்" என்று எதிர்மறையான வார்த்தைகளை சொல்லமாட்டார்கள். அவர்கள் விசுவாச வார்த்தைகளையும், நல்ல வார்த்தைகளையும் நேர்மறையான வார்த்தைகளையுமே பேசுவார்கள். அப்படி செய்வதால், அவர்கள் மற்றவர்களை ஊக்குவித்து அவர்களுக்குள் விசுவாசத்தை நடுவார்கள்.

### ◆ இஸ்ரவேலர்கள் விசுவாசத்துடன் யோர்தான் நதியை கடந்தனர்.

இஸ்ரவேலர்கள் இரண்டு வேவுகாரர்களின் அறிக்கையை கவனித்து உயர்ந்த மனோநிலையில் எரிகோ பட்டணத்திற்கு நேராக தீவிரமாய் சென்றார்கள். ஆனால் எரிகோ பட்டணத்திற்கு போகும் வழியில் உள்ள யோர்தானின் வலுவையான ஜலப்புரள்தலினால் தாக்கப்பட்டனர். அதற்கும் மேலாக அது மழை காலமாய் இருந்தபடியால், யோர்தான் அதின் கரை முழுவதிலும் புரண்டோடியது. நேரம் சரியானபோது, அவர்கள் எவ்வாறு யோர்தானை கடக்க வேண்டும் என்று தேவன் அவர்களை அறியச்செய்தார். அவர் கர்த்தருடைய பெட்டியை சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தான் தண்ணீரில் நுழையும்போது தண்ணீர் வெட்டுண்டு ஒரு குவியலாக நிற்கும் என்று சொன்னார்.

யாத்திராகமத்தின் முதலாம் தலைமுறையினர் இதைக்கேட்டிருந்தால், அவர்கள் என்ன சொல்லியிருந்திருப்பார்கள்? அவர்கள் தேவன் அவர்களை கொல்ல விரும்புகிறார் என்று கூறி முறுமுறுத்திருப்பார்கள். ஆனால் இரண்டாம் தலைமுறையினரோ ஒரு சிறு முறுமுறுப்பு அல்லது சந்தேகமான வார்த்தையை கூட உச்சரிக்கவில்லை. யோர்தான் நதி கரை புரண்டோடினாலும், அதை தடுத்து நிறுத்துவது என்பது தேவனுக்கு பெரிதானது ஒன்றுமில்லை என்று விசுவாசித்தனர். காரணம் அவர் ஏற்கனவே செங்கடலை இரண்டாக பிளந்தவர்.

யோர்தானை கடப்பதற்கு முன்பு, யோசுவா இஸ்ரவேலர்கள் தங்களை "பரிசுத்தமாக்கி"கொள்ள சொன்னான் (யோசுவா 3:5). இஸ்ரவேலர்கள் சிவந்த சமுத்திரத்தை கடக்கையில் தேவனுடைய வல்லமையும் மோசேயின் கீழ்ப்படிதலும் மட்டுமே அவசியமாய் இருந்தது. அவர்கள் யோர்தானை கடக்கையில், எப்படியும் இஸ்ரவேலர்கள் அனைவரது விசுவாசமும் அவசியமாயிருந்தது.

✣ யோசுவா 3-ம் அதிகாரத்தின் இறுதியில் ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே, மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் அப்படியே குவியலாக நின்றது. மேலும் உப்புக் கடலுக்கு போகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று என்று பார்க்கிறோம். கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே தண்ணீரில்லாத தரையில் காலூன்றி நிற்கும்போது இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய்க் கடந்துப் போனார்கள். ஆசாரியர்கள் யோர்தான் நடுவிலிருந்து ஏறி, அவர்கள் உள்ளங்கால்கள் கரையில் ஊன்றினபோது, யோர்தானின் தண்ணீர்கள் அவர்களிடத்துக்குத் திரும்பி, முன்போல அதின் கரையெங்கும் புரண்டது. இதன் மூலமாக, இஸ்ரவேல் புத்திரர்கள் எல்லாரும் அவர்கள் மோசேக்கு பயந்திருந்தது போல யோசுவாவுக்கும் பயந்திருந்தார்கள். யோசுவாவின் மேல் உறுதியான நம்பிக்கை வைக்கலானார்கள்.

தேவன் அவர்களிடம் யோர்தான் நடுவிலிருந்து பன்னிரெண்டு கற்களை எடுத்து யோர்தானை கடந்த பின் அவர்கள் முதலில் தங்கும் இடத்தில் வைக்கும்படியாக சொன்னார். ஆசாரியர்கள் அவர்களுடைய உள்ளங்கால்கள்படும்படியாய் நின்ற இடத்திலும்கூட பன்னிரெண்டு கற்களை வைக்கும்படியாக கூறினார். இந்த கற்கள் இஸ்ரவேலரின் பன்னிரெண்டு கோத்திரங்களை குறிப்பதற்காகும். அவர்களுக்கு முன்பாக தேவன் செய்ததை நினைத்து அவர்கள் அவருக்கு பயந்து கீழ்ப்படியவேண்டும் என்று தேவன் விரும்பினார் (யோசுவா 4:21-24).

என்ன நடக்கும் என்று முன்னறிந்த மோசே உபாகமம் 27ம் அதிகாரத்தில் எழுதியுள்ளபடி யோர்தானைக் கடந்த பின்னர் இஸ்ரவேலர்கள் பெரிய கற்களை எடுத்து, சாந்து பூசி, அவைகளை நாட்ட வேண்டும் என்று கட்டளையிட்டார். ஆகவே யோசுவா கில்காலில் முகாமிட்டு யோர்தானை கடந்தபின்னர், உலர்ந்த நிலத்தில் பன்னிரெண்டு கற்களை ஞாபக சின்னமாக ஏற்படுத்தினார். அக்கற்கள் இஸ்ரவேலர்கள் தேவனுடைய வல்லமையாலே உலர்ந்த தரையில் யோர்தானை கடந்தனர் என்று அடையாளப்படுத்துகிறது.

# "இந்த அயல் நாட்டிலும் கூட கர்த்தருடைய அன்பு என்னை சந்தோஷப்படுத்தியது"

கண்காணியை. போக்யங் கிம் (ஜப்பானிலுள்ள ஐடா மான்மின் சபை)

நான் பட்டமளிக்கும் பள்ளியில் சேரும் படியாக மே 2001ல் ஜப்பான் நாட்டிற்கு கடந்து சென்றேன். கொரியாவில் வசிக்கும் போது சபையில் பங்கு பெற்றுவந்தேன், ஆனால் ஜப்பானில் திருச்சபையை கண்டுபிடிப்பது கடினமாயிருந்தது. மனகிலேசமடைந்தவளாக சபைக்கு செல்லவேண்டுமென மெய்யாகவே விரும்பினேன். அச்சமயத்தில் என் ஆண்டவர் என்னிடத்தில் வந்தார்.

### அறிவர்.லீ ஜேராக் அவர்களின் புத்தகங்களால் தொடப்பட்டேன்.

2003ம் ஆண்டு துவக்கத்தில், மிஷனரி. சாங்மி லீ அவர்கள் அறிவர்.லீ அவர்களது சாட்சி புத்தகமான மரணத்திற்கு முன் நித்திய வாழ்வை ருசித்தல் என்ற புத்தகத்தை எனக்கு கொடுத்தார். அதை வாசித்து, நான் ஆழமாய் அசைக்கப்பட்டேன். பின்னர், நான் ஒசாகா மான்மின் திருச்சபையில் பங்குபெற ஆரம்பித்தேன். நான் ஏன் விசுவாசிக்க வேண்டும் என்று என்னை உணர வைத்த சிலுவையின் செய்தி என்ற அவரது புத்தகத்தையும்கூட நான் வாசித்தேன். ஒரு உண்மையான கிறிஸ்தவனுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதென்று அறிந்து கொள்ளலானேன். எனக்கு இப்பேர்பட்ட சத்தியம் தெரியாததால் ஆவிக்குரிய ரீதியில் அலைந்து திரிந்த என் மேலே அது விடியலாய் உதித்தது.

வேதாகமத்தின் மையத்தை உள்ளடக்கிய அப்புத்தகங்களை வாசிக்கையில் அதிகமான கிருபை பெற்றேன். இறுதியாக, உண்மையான மேய்ப்பரை சந்தித்துவிட்டேன் என்ற நிச்சயமுடையவளானேன். எனது ஆண் நண்பரான, கவாகுச்சியினிடத்தில் அறிவர்.லீயையும், திருச்சபையையும் குறித்து அச்சமயத்தில் பேசினேன். ஏப்ரல் 2003ல், அவர் தேவனுடைய வல்லமையால் பயங்கரமான மகரந்த அலர்ஜி (எதிர்விளைவில்)யிலிருந்து சுகத்தை பெற்றனுபவித்தார். அதனால் அவர் ஒரு கிறிஸ்தவராக மாறினார்.

### எனக்கு திருமணமானது, எனது மாமனார் தேவனை சந்தித்தார்.

2004 ஜனவரியில், கவாகுச்சியும் நானும் திருமணம் செய்து கொண்டு, அவரது தந்தையுடன் வாழ்ந்தோம். வீட்டில் ஒரு புத்தக்கோயில் இருந்தது. ஆனால் எனது மாமனார் மென்மையான கனிவுள்ள மனிதராய் இருந்தபடியால், நான் ஒரு சுதந்திரமான கிறிஸ்தவ வாழ்க்கை நடத்த முடிந்தது. இப்படி இருக்கும்படியாக அவர் என்னை அனுமதித்தார்.

எனது மாமனார் செவி இரைச்சலினாலே ஒன்பது வருடங்களாக கஷ்டப்பட்டு கொண்டிருந்தார். குறைவான சப்தத்தை அவர் கேட்கமுடியாமல் போவதற்கு இதுவே காரணமாயிற்று. செப்டம்பர் 2004ல், நான் போதகர்.ஹீசன் லீ-யுடன் நடத்தப்படவிருக்கும் 2004 ஜப்பான் கைக்குட்டை சுகமளிக்கும் (அப் 19:11-12) கூட்டங்களை குறித்து கேள்விப்பட்டேன். எனது மாமனார் அக்கூட்டத்தில் பங்குபெற்று போதகர் லீயின் கைக்குட்டை ஜெபத்தை பெற்றுக்கொண்டார். அவர் தன் மண்டையின் உச்சியிலிருந்து ஏதோ வெளிவந்ததை உணர்ந்ததாக சொன்னார். அதன்பின் செவி இரைச்சலின் அறிகுறிகள் மறைந்துப்போனது. அவர் இயல்பாக கேட்கலானார்.

ஆகஸ்ட் 2005ல், அவர் கடந்து போய்விட்டார். அச்சமயத்தில் அவருடைய முகத்தில் ஒரு புன்னகை இருந்தது. எனது கணவர், "அவர் அவ்வளவு சந்தோஷமாக சிரித்ததை நான் பார்த்ததேயில்லை" என்றார். அவரை பார்த்ததால், நானும் எனது கணவரும் பரலோகம் இருக்கிறதை குறித்து நிச்சயித்து கொண்டோம், எங்களது விசுவாசமும் அதிகரித்தது.

### ஜெபத்துடன் என் இருதயமாகிய நிலத்தை விசாலமாக்கினேன்.

ஜப்பானில் புத்த கலாச்சாரம் இங்குமங்குமாக பரவி உள்ளது. வித்தியாசமான மதங்கள் இருக்கின்ற காரணத்தால் குடும்பங்களில் அடிக்கடி சண்டைகளும் உண்டு. என்னுடைய குடும்பமும் இதற்கு விதிவிலக்கல்ல. எனது கணவனார் தயாளமுள்ள மனிதனாய் இருந்தாலும், கலாச்சார வித்தியாசம் அல்லது கண்ணியத்தில் அடிக்கடி எனது சம்பந்தகார குடும்பத்தில் சங்கடங்கள் இருந்தன.

மே 2007ல், ஐடாவிற்கு நகர்ந்து சென்று ஐடா மான்மின் சபையில் பங்குபெற துவங்கினேன். எனது கடமைகளை ஊக்கமாக செய்தேன். நான் நல்லதொரு கிறிஸ்தவ வாழ்க்கை நடத்தினேன் என்று நினைத்து கொண்டிருந்தேன். ஆயினும் என்னால் அபரிதமான கனிகளை விளைவிக்க முடியவில்லை. நான் என்னை கண்டறிய முயற்சி செய்து என்னை மிகவும் நன்றாக ஆராய்ந்திருந்தேன்.

நான் எனது சில சங்கடங்களை எப்போதும் மற்றவர்கள் மேலே சாட்டிகொண்டிருந்ததை அறிந்துணர்ந்தேன். எனது மனநிலையை மாற்றி எனது தவறுகளை ஒத்துக் கொள்ள கடினமாக முயற்சி செய்தேன். தாழ்மையுள்ள இருதயத்துடன் மற்றவர்களை மதித்து எனது கணவருக்காக முழு இருதயத்துடன் ஜெபித்தேன். ஒவ்வொரு நாள் இரவு தானியேல் ஜெப கூடுகையில் மேட்டிமை, கசப்புணர்வு போன்றவைகளிலிருந்து விடுதலை பெறும்படியாக ஜெபித்தேன். நான் எனது வேலை ஸ்தலத்திலுள்ள வித்தியாச வகையான ஜனங்களையும்கூட புரிந்து கொள்ள எனக்கு உதவுமாறு தேவனிடம் கேட்டுக்கொண்டேன். அவர் பரத்திலிருந்து அப்படி செய்ய எனக்கு பெலனளித்தார். இவ்வாறாக, நான் எனது இருதயத்தை விருத்தசேதனம் பண்ணினேன், அது என்னை ஆசீர்வாதங்களுக்கும் பதில்களுக்கும் நேராக வழிநடத்தியது.

### ஆவியிலும் சரீரத்திலும் ஆசீர்வாதங்கள் என் குடும்பத்தின் மேலே பெருகி ஓடுகிறது.

பிப்ரவரி 2008ல், மிகவும் பிரபல்யமான கடிகார உற்பத்தியாளரான சிட்டிசன் கடிகார நிலையத்தில் நான் சேர்ந்தேன். எனது கணவரிடம் கலந்துரையாடியப் பின்னர், எனது முதல் சம்பளத்தை முழுவதும் தேவனுக்கு கொடுத்தேன். எனது விசுவாச கிரியையில் பிரியம் அடைந்த தேவன் எனது கணவரை ஆசீர்வதித்தார். அவருக்கு 50,000யென் ஊதிய உயர்வுடன் சம்பளத்தோடேகூட விடுமுறை கொடுக்கப்பட்டது. நானும்கூட எனது நிறுவனத்தில் ஆட்குறைப்பு மறுபரிசீலனையிலிருந்து பாதுகாக்கப்பட்டேன்.

நவம்பர் 2011ல் எங்களுக்கு ஒரு புதிய வீட்டை ஆசீர்வாதமாக பெற்றுக்கொண்டோம். ஜனவரி 2012ல் எனது 7 வயது மகள், யூரிக்கு ஜுரம் ஏற்பட்டு காய்ச்சல் 103° F (39.4°C) வரை உயர்ந்தது. நான் அவளுக்கு போதிக்க முற்பட்டு எரிச்சலாகி கோபத்தில் வெடித்ததை அறிக்கை செய்து மனந்திரும்பினேன். பின்பு, அவளது காய்ச்சல் விரைவில் குணமானது. இந்த நிகழ்வின் மூலமாக எனது சுயநீதியையும், சுய தோற்றமான எண்ணங்களையும் உடைத்தெறியும்படியாக ஆசீர்வதிக்கப்பட்டேன்.

ஒரு வரிசையில் மூன்று வருடங்களாக ஆண்கள் ஐக்கியத்தின் தலைவராக செயல்பட்டு எனது கணவர் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக உண்மையுள்ள வேலைக்காரராய் மாறியுள்ளார். அவர் அதிகாலையில் நடத்தப்பட்ட விடியற்கால ஜெப கூட்டங்களிலும்கூட பங்குப்பெற்றார். நான் பெண்கள் ஐக்கியத்தின் துணை தலைவியாகவும் கோதுமை பிள்ளைகள் ஆராதனை குழுவின் வழிகாட்டி ஆசிரியையாகவும் பணிபுரிந்து வருகிறேன். பிரஜையுரிமைகளையும் கடந்து எனது குடும்பம் ஒன்றாக இணைந்திருப்பதை பார்க்கும்போது நான் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறேன் என்பதை என்னால் சொல்ல முடியவில்லை. அன்பின் ஆண்டவருக்கு எனது நன்றிகளை செலுத்துகிறேன்.



"தேவனுடைய வல்லமை என்ற DVD மூலமாக அநேக ஆத்துமாக்கள் இயேசுகிறிஸ்துவை



போதகர். அல்வ்ரெட் ராய்
(அசான் திருச்சபை, வங்காளதேசம்)

வங்களாதேசத்தில் உள்ள இந்துக்கள், முஸ்லீம்கள் மத்தியில் நான் சுவிசேஷத்தை பரப்பி கொண்டிருக்கிறேன். கடந்த வருடம், நேபாளத்தில் உள்ள ஜான் காதரிடமிருந்து "தேவனுடைய வல்லமை" என்ற தலைப்பில் உள்ள DVDயை நான் பெற்றுக் கொள்ள நேர்ந்தது. அதைப் பார்க்கையில், பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகளால் நான் ஆச்சரியப்பட்டுப்போனேன். காரணம், அறிவர்.லீ ஜேராக் அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட தேவனளித்த வல்லமை மெய்யாகவே பிரமிக்க செய்தது.

அனைத்து காட்சிகளிலும், தேவனால் மட்டுமே காண்பிக்கக்கூடிய வல்லமையின் மூலமாக சுகமாக்கப்பட்டு இரட்சிப்பை பெற்றுக் கொண்ட எண்ணற்ற மக்கள் தேவனுக்கு மகிமை செலுத்திக்கொண்டிருந்தனர். அச்சமயத்திலிருந்து, நான் பல முறைகள் DVD காட்சியை ஒளிபரப்பி சுவிசேஷத்தை பரப்பி உள்ளேன். அப்படி செய்வதால் அநேக ஜனங்கள் சுகத்தைப்பெற்று இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் ஆசி பெற்றனர்.

DVD உறையிலிருந்த விலாசத்திற்கு மின்னஞ்சல் அனுப்பினேன். போதகர். ஜான் கிம் (டெல்லியில் உள்ள மான்மின் மிஷன் சென்டர், இந்தியா) எனக்கு அறிவர்.லீ அவர்களது புத்தகங்களையும் மான்மின் செய்திகளையும் அனுப்பினார். அப்புத்தகங்களை வாசித்தேன். குறிப்பாக, அறிவர்.லீ அவர்களது சுயசரிதையான என்வாழ்வும், என்விசுவாசமும் I & II-ஐ வாசிக்கையில் என் விசுவாசம் வளர்ந்தது. போதகர்.கிம் வல்லமை நிறைந்த கைக்குட்டை வைத்து தமது ஊழியம் செய்வதையும் கண்டு நான் அவரை இந்த கைக்குட்டையை எவ்வாறு பெறலாம் என கேட்டேன். ஏனென்றால், அப்போஸ்தலர் 19:11-12ல் எழுதியுள்ளபடி வல்லமையான ஊழியர் ஜெபித்த கைக்குட்டையில் உள்ளடங்கியுள்ள வல்லமையை நான் விசுவாசித்தேன்.

கடந்த அக்டோபர், போதகர்.கிம் சியோல் போய் வந்து அறிவர்.லீ அவர்கள் ஜெபித்த கைக்குட்டையை எனக்கு தந்தார். அப்போதிலிருந்து நான் கைக்குட்டையுடன் ஜெபித்துள்ளேன். வியாதியஸ்தாகளுக்காக ஜெபிக்கையில் ஆச்சரியமான கிரியைகளை கண்டுள்ளேன். நடக்க முடியாதோர் நடக்கவும், நகரவும் ஆரம்பித்தனர். ஆஸ்மா போன்ற வியாதிகளிலிருந்து மக்கள் சுகம் பெற்றனர். பலர் மனநல வியாதிகளிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டனர். அவர்கள் தேவனுக்கு மகிமை செலுத்தினர். தேவனிடமிருந்து அறிவர்.லீ அவர்கள் பெற்றுக் கொண்ட வல்லமையின் மூலமாக, நான் பல ஜனங்களிடத்தில் வேதாகமத்தின் மெய் தன்மைக்கும், ஜீவனுள்ள தேவனுக்கும் சாட்சி பகிர முடிகிறது. எல்லா நன்றியையும் மகிமையையும் நான் தேவனுக்கு ஏறெடுக்கிறேன். எனது உண்மையான நன்றிகளை அறிவர்.லீ ஜேராக் அவர்களுக்கும் தெரிவிக்கிறேன்.

Now You can Watch
Rev. Dr. Jaerock Lee's
Program On
Arulvaakku GCN TV
@ all over Puducherry.
www.gcntv.org

MANMIN BIBLE COLLEGE
(Manmin International Seminary - India Campus)
15D/41, Ponnankinaru Street,
Villivakkam, Chennai - 600049
Tel: 044-43554542
E-mail: indiamis@gmail.com

Landmark for
Chennai Manmin
Holiness Church
15D/41, Ponnankinaru Street,
Villivakkam, Chennai - 600049
Tel: 044-43554542

